OS.No.24/2019
DW3 – சக்திவேல்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எனது தரப்பில் தாவா சொத்திற்கான எஸ்.எல்.ஆர் நகல் தாக்கல் செய்துள்ளேனா என்று ஞாபகமில்லை. வாதி தரப்பில் தாவா சொத்திற்கான எஸ்.எல்.ஆர் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாரின் தாத்தா பெயர் வேலுத்தேவர் என்றால் சரிதான். மேற்கண்ட வேலுத்தேவர் பேச்சியம்மாள் என்பவரிடமிருந்து பி.வா.சா.ஆ.16 ஐ வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

**2.** பி.வா.சா.ஆ.17 எனது தாத்தா வேலுத்தேவரும் காவாக்குளத்தை சேர்ந்த முனியாண்டி நாடார் இரண்டு பேரும் சேர்ந்து முனியாண்டி வகையறாவிடம் கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.18 ஆவணம் துரைராஜ் என்பவர் வேலுத்தேவர் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான்.

**3.** பி.வா.சா.ஆ.16 முதல் 18 வரையிலான ஆவணங்களில் கிரையம் கொடுத்த நபர் பெயர் வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.16 முதல் 18 வரையிலான ஆவணங்களில் பட்டா எண், சர்வே எண், பைமாஸ் எண் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்திற்கான நான்குமால் விவரம் தெரியும்.

**4.** நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.16 முதல் 18 வரையில் உள்ள ஆவணங்களில் தாவா சொத்திற்குரிய நான்குமால் விவரங்கள் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதை பற்றி விவரங்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்தானது புனவாசல் குரூப், ஆப்பனூர் என்றால் சரிதோன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.16 முதல் 18 ஆவணங்களில் புனவாசல் கிராமத்தில் சொத்து உள்ளதாக உள்ளது

என்றால் அது பற்றி ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.16 முதல் 18 வரை உள்ள ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் தாவா சொத்திற்கு உரியதல்ல என்றாலும், புனவாசல் கிராமத்தில் உள்ள வேறொரு சொத்திற்கு உரியதல்ல என்றாலும் புனவாசல் நீர்ப்பிடி பகுதியை ஒட்டியுள்ள சொத்திற்கு உரியதாகும்.

5. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், பி.வா.சா.ஆ.16 முதல் 18 வரை உள்ள சொத்துக்கள் வேறு பகுதியில் உள்ள சொத்துக்கள் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.18 ல் குறிப்பிடப்பட்டுள்ள மேற்குமாலில் சொல்லப்பட்டுள்ள இருளன் என்பவர் வாதியின் தகப்பனார் அல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்காக வேறு ஒரு இடத்திற்கான பத்திரங்களை தாக்கல் செய்து விட்டு தாவா சொத்தை அபகரிக்கும் விதமாக எதிர் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதியின் தகப்பனார் எந்த காலத்திலும் யாருக்கும் ஒத்தி வைக்கவில்லை என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கின் 10ம் பிரதிவாதி செந்தூரானுக்கு என் தகப்பனார் கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் எனது தரப்பில் பி.வா.சா.ஆ.18 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.18 ல் மேலே குறிப்பிட்ட பி.வா.சா.ஆ.16,17 வரை ஆவணங்களில் அடிப்படையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.18 ல் என்னுடைய தகப்பனாருக்கு பூர்வீக சொத்து என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.1 ல் செட்டில்மெண்ட் காலத்தில் சாமுவேல் மகன் இருளன் என்று உள்ளது என்றால் சரிதான். யு.டி.ஆர் சர்வே 1987 ல் ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு சர்வே செய்த சமயத்தில் அதில் என்னுடைய தகப்பனார் பெயரும் பன்னீர் என்பவர் பெயரும் தவறுதலாக ஏற்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன பன்னீருக்கோ, அவருடைய வாரிசுகளுக்கோ தாவா

சொத்தில் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**8.** மேற்கண்டவாறு தவறாக பட்டா ஏற்பட்டதை வைத்துக்கொண்டு எனது தகப்பனார் செந்தூரானுக்கு பி.வா.சா.ஆ.16 முதல் 18 ஆவணங்களில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஞாபகமில்லை. மேற்சொன்ன பி.வா.சா.ஆ.16 முதல் 18 ஆவணங்களை வைத்துதான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தரப்பில் பி.வா.சா.ஆ.20 ஆக வருவாய் ஆய்வாளர் போட்ட உத்தரவு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**9.** அந்த உத்தரவு ஏற்கனவே வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.20 ல் வாதி என்னுடைய தகப்பனார் பெயரிலும் பன்னீர் என்பவர் பெயரிலும் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்து தாக்கல் செய்த உத்தரவு என்றால் அது பற்றி ஞாபகமில்லை. அந்த உத்தரவில் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி ஞாபகமில்லை. அவ்வாறு ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**10.** முனியாண்டி நாடார் தனிப்பட்ட முறையில் பி.வா.சா.ஆ.16 முதல் 18 சொத்துக்கள் சம்மந்தமாக என்னுடைய தாத்தாவிற்கு வேறு பத்திரங்கள் எழுதிக்கொடுத்துள்ளரா என்றால் அது பற்றி ஞாபகமில்லை. தாவா சொத்து வாதி மற்றும் 5 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாத்தியமானது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1 முதல் 4, 10 முதல் 14 பிரதிவாதிகளுக்கு எந்த வித சம்மந்தமும் அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.